# 3,792 மாணவர்கள் இலவச பயணம்



**சென்னை, பிப். 6–**

மெட்ரோ ரயிலில், ஒரு மாதத்தில், 3,792 மாணவர்கள், இலவச பயணம் அழைத்து செல்லப் பட்டுள்ளனர்.

மெட்ரோ ரயிலின், நவீன தொழில் நுட்பம் குறித்து, சென்னை மாநகராட்சி பள்ளி, மாணவ – மாணவியர் தெரிந்து கொள்வதற்காக, 'கல்விச் சுற்றுலா' என்ற பெயரில், மெட்ரோ ரயிலில், இலவச பயணம் அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., – விமான நிலையம் மற்றும் சென்ட்ரல் – விமான நிலையம் வரை, பயணம் அழைத்து செல்லப்படுகின்றனர்.

இப்பயணத்தில், ஜனவரியில் மட்டும், மாநகராட்சி பள்ளிகளைச் சேர்ந்த, 3,792 மாணவ – மாணவியர் இலவச பயணம் அழைத்துச் செல்லப் பட்டுள்ளனர்.

கடந்த, 2018 ஜூன் முதல், 2019 ஜனவரி வரை, 26 ஆயிரத்து, 310 மாணவர்கள் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என, மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்து உள்ளது.